# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 35. ஆடையகங்கள்

**பிரத்தியேக தகவல்கள் /வழிகாட்டல்கள்**
**இயக்குனர் / உரிமையாளர் / வேலை வழங்குனர்**
**திறப்பதற்கு முன், பொறுப்பு முகாமையாளர்**

- ஊழியர்கள் அவர்களது தனிப்பட்ட பாதுகாப்பு குறித்துப் பயிற்றுவிக்கப்படவேண்டும்; முகமூடிகளை அணிவதற்கான சரியான வழிமுறை, கைச் சுகாதாரம் குறித்து கவனம் செலுத்துதல், தும்மும்போது வாய் மற்றும் மூக்கினை ஒரு மெல்லிழைத் தாள் (tissue) கொண்டு அல்லது முழங்கையினால் மூடுதல்.
- ஊழியர்களின் உடல்நலம் குறித்து தினமும் விசாரிக்கும் முறையையும் (காய்ச்சல் மற்றும் இருமல் / சளி போன்ற சுவாச அறிகுறிகளைக் கேளுங்கள்) மற்றும் அவர்களுக்கு தகுந்த மருத்துவ ஆலோசனையைப் பெறுவதற்கான செயல்முறையையும் பின்பற்றுங்கள்..
- பெரிய ஆடையகங்களில் - ஆடையக நுழைவாயிலில் உடல் வெப்பநிலை கண்காணிப்பு கருவிகளை நிறுவுவதுடன், சாதாரண வெப்பநிலை உள்ளவர்கள் மட்டுமே உள்ளே நுழைய அனுமதிக்கவும்.
- சுவாச அறிகுறிகள் உள்ளவர்கள் நுழைவதைத் தவிர்க்கவும் என்ற அறிவித்தலை சிறிய ஆடையகங்கள் வாயிலில் காட்சிப்படுத்தலாம்.
- இயலுமாயின் நுழைவாயிலில் கை கழுவும் வசதிகளை அமைத்து, கடைக்குள் நுழையும் அனைவரையும் கைகளைக் கழுவ ஊக்குவிக்கவும்
- காற்றோட்டத்தை பலப்படுத்துங்கள்; வளிப்பதனாக்கியின் இயல்பான செயல்பாட்டை உறுதிசெய்து, புதிய காற்றோட்டத்தை அதிகரிக்கவும் மற்றும் அனைத்து அமைப்புகலிருந்தும் காற்று மீள் வருவதைத் தடுக்கவும்
- காற்றோட்டத்தினை மேம்படுத்துக. மத்திய வளிப்பதனாக்கியைப் (central air conditioner) பயன்படுத்தினால் வளிப்பதனாக்கியின் சாதாரண இயக்கத்தினை உறுதிப்படுத்துக, சுத்தமான வளியினை அதிகரிக்கவும். அனைத்துக் காற்றுச் சுற்றோட்டத் தொகுதிகளிலும் வளி மீள் சுற்றோட்டத்தினை நிறுத்தி வைக்கவும்.
- அடிக்கடி தொடுகைக்குள்ளாகும் பொதுப் பாவனைப் பொருட்கள் மற்றும் அமைப்புகளை ( பாதுகாப்புப் பெட்டகங்கள், மின்உயர்த்தியின் ஆழிகள், நகரும் படிகளின் கைப்பிடிகள், மலசல கூடங்களது கதவுக் கைப்பிடிகள், பொதுவான குப்பைத் தொட்டிகள் போன்றவை) சுத்தமாக்கித் தொற்றுநீக்கம் செய்ய வேண்டும்.
- மின்உயர்த்தி, தகவல் மையம் மற்றும் விற்பனைப் பகுதியைச் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருங்கள், உரிய நேரத்தில் குப்பைகளை அகற்றவும்.
- வாடிக்கையாளர்கள் பணம் செலுத்துவதற்கும் வெளியேறுவதற்கும் வரிசையில் காத்திருக்கும் போது தமக்கிடையே பாதுகாப்பான இடைவெளியினை பேணவேண்டும் என்பதனை நினைவுபடுத்தும் பொருட்டு 'வரிசையில் ஒரு மீற்றர் இடைவெளி' (வரிசையில் நபர்களுக்கு இடையில் ஒரு மீற்றர் இடைவெளி விட்டு காத்திருப்பதற்கான) விட்டுத் தரையில் அடையாளங்கள் இடப்பட வேண்டும்.
- மக்களின் வருகையினைக் குறைப்பதுடன் புறநகரங்காடிகளில் (Malls) அல்லது ஆடையகங்களில் வாடிக்கையாளரது எண்ணிக்கையைக் குறைவாகப் பேணவும்.
- சுய சேவை கொள்வனவு மற்றும் நிகழ்நிலைக் கட்டணம் செலுத்தும் முறை ஆகியவை பரிந்துரைக்கப்படுவதுடன் வரிசையில் காத்திருக்கும் நேரத்தைக் குறைக்கவும்.
- மின்உயர்த்திகளைப் பாவிக்கும் போது வாடிக்கையாளர்கள் முகக்கவசங்களை அணிந்து கொள்வதுடன் ஒருவருக்கொருவர் உடல் இடைவெளியைப் பேண வேண்டும்.
- பொதுமக்கள் உபயோகிக்கும் மலசலகூடங்களுக்குத் தேவையான அளவு கைகழுவுவதற்கான திரவ சவர்க்காரம் (அல்லது சவர்க்காரம்) வழங்கப்பட வேண்டும் அத்துடன் மற்றும் நீர் ஆழிகள் உள்ளிட்ட நீர் வழங்கும் வசதிகள் பழுதின்றிச் செயற்படுவதனை உறுதிப்படுத்த வேண்டும்.
- ஆடைகளை அணிந்து பார்ப்பதை ஊக்குவிக்கக்கூடாது. விற்பனை செய்த ஆடைகளைப் பின்னர் கொண்டு வந்து மாற்றிச் செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது என்ற கொள்கை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும். இது குறித்த அறிவித்தல்கள் உடை அணிந்து பார்க்கும் அறைகள் மற்றும் கட்டணம் செலுத்தும் பகுதிகள் உள்ளிட்ட பல இடங்களில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

- உங்களுக்கு வழங்கப்பட்ட, கடைப்பிடிக்கப்பட வேண்டியவைகள் மற்றும் அறிவுறுத்தல்களுடன் கூடிய உறுதிப்படுத்தும் படிவத்தினை நிரப்ப வேண்டும். இந்த உறுதிப்படுத்தும் படிவத்தின் மூலப் பிரதியானது உங்களது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இதன் பிரதி ஒன்று பிரதேசத்திற்கு உரிய உள்ளூராட்சி மன்றிற்கு (மாநகர சபை/ நகர சபை/ பிரதேச சபை) அனுப்பப்பட வேண்டும் என்பதுடன் இதன் இன்னொரு பிரதி உங்கள் வசம் இருக்க வேண்டும். மேற்கூறப்பட்ட வழிகாட்டல்கள் இறுக்கமாகப் பின்பற்றப்படுவதனை உறுதிப்படுத்துவது நிறுவனத்தின் / வளாகத்தின் உரிமையாளர்/தொழில்தருனர்/முகாமையாளர் இனது பொறுப்பாகும்.

- *முக்கியம்: உறுதிப்படுத்தப்பட்ட கோவிட் -19 நோயாளி கண்டறியப்பட்டால், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியினது குழுவின் வழிகாட்டல்களின் கீழ் வளிப்பதனாக்கும் தொகுதிகள் மற்றும் காற்றோட்டத் தொகுதிகள் சுத்தப்படுத்தப்பட்டுத் தொற்று நீக்கம் செய்யப்பட வேண்டும். அத்துடன் சுகாதார வைத்திய அதிகாரியினால் சுகாதார மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்படும் வரை அவற்றினை மீள இயக்கக்கூடாது.*

**நுழைவாயிலில் பின்வருவன குறித்த காட்சிப்படுத்தலை மேற்கொள்ளலாம் :**

- வாடிக்கையாளர்கள் ஆடையகத்திற்குள் நோக்கமின்றிச் சுற்றித்திரியக் கூடாது என்று கடுமையாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- நிகழ்நிலை மூலம் கொள்வனவு மேற்கொள்ளப்படலாமா / இல்லையா
- முதியவர்கள், சிறு குழந்தைகள் இங்கு காத்திருக்கக் கூடாது.
- வாங்கவேண்டிய பொருட்களை முன்னதாகவே திட்டமிட்டுக் கொள்ளுங்கள். இதன்மூலம் இங்கு செலவிடும் நேரத்தைக் குறைத்துக் கொள்ள முடியும்.



சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020